திரு. ஏ. சுப்ரமணியம் : தலைவர் அவர்களே, ஒத்துக்கொள்கிறேன். வரி என்பது இந்த மாகாணத்துக்கும் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், பேசுவதில் தவறு இல்லை என்று எண்ணுகிறேன். மற்றக் கட்சிக்காரர்கள் எல்லாம் இதைப் பேசாமல் இருந்திருப்பார்களானால், நானும் பேசாமல் இருந்திருப்பேன். இல்லாததால் தான் மதியைப் பற்றியும் விதியைப் பற்றியும் சொல்கிறேன். சதி செய்துவிட்டார்கள் என்று சொல்லுவதால்தான் மதியை உபயோகிக்கச் சொல்லுகிறேன். ஒரு உதாரணம் சொல்கிறேன், தலைவர் அவர்களே. இங்கிலாந்து நாட்டு பிரதமர் அட்லி அவர்கள்தான் நம்முடைய தேசத்திற்குச் சுதந்திரம் கொடுத்தவர். இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு அவர்கள் சென்னைக்கு வந்திருந்தார்கள். அப்போது மாஜி மெம்பராக இங்கிருந்த ரஜாகான் அவர்களும் நானும் அவர்கள் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் அப்போது ஒரு கேள்வி கேட்டோம். தொழில் கட்சி அதிகாரத்தில் நீங்கள் பதவியில் இருந்தீர்கள். இப்போது சர்ச்சில் கன்சர்வேட்டிவ் கட்சி அதிகாரத்தில் வந்திருக்கிறார்கள். மறுபடியும் தொழிற் கட்சி வருகிறது. இப்படி மாறிமாறி வருகிறதே என்று கேட்டோம். அதற்கு அவர், "இப்போது சர்ச்சில் கட்சிக்காரர்கள் அதிகாரத்தில் இருக்கிறார்கள். நாங்கள் எதைச் சொன்னோமோ அதை இப்போது சர்ச்சில் கட்சி அரசாங்கத்தில் செய்கிறார்கள். ஆகையால் அவர்கள் செய்ததை நாங்களும் ஆதரிக்கிறோம்" என்று சொன்னார்கள். அதைப்போல காங்கிரஸ் அரசாங்கம் செய்வதை இவர்கள் ஏற்றுக் கொண்டால் நல்லது. இப்போது இருக்கிற திராவிட நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டால், பொதுமக்கள் ஒருவேளை இவர்களை ஆதரித்தாலும் ஆதரிக்கலாம். காங்கிரஸ் மக்களுக்கு உரியதைச் செய்கிறார்கள். ஆகையால் மற்றக் கட்சிக்காரர்கள் கட்சிக்காக எதையும் பேசுவது பிரயோசனம் இல்லை. இது சம்பந்தமாக ஒரு கதை ஞாபகத்தில் வருகிறது. ஒரு மாமியார் இருந்தாள். அந்த அம்மாவுக்கு ஒரு மருமகள். ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் வந்து அம்மா பிச்சை என்று அங்கு வந்து கேட்டான். மருமகள் சொன்னாள், பிச்சை கொடுக்கவேண்டியது

நியாயம்தான், ஆனால் மாமியார் இல்லை, பின்புறம் போயிருக்கிறார்கள். பிறகு வா! இப்போது பிச்சை இல்லை! என்றாள். போகச் சொன்னாள். மாமியார் பின்னால் இருந்து பார்த்துக் கொண்டே இருந்தாள். உடனே பிச்சைக்காரனைக் கூப்பிட்டாள். மருமகள் என்ன சொன்னாள் என்று அவனைக் கேட்டாள். அவன் மருமகள் சொன்னதைச் சொன்னான். மாமியார், "அவள் எப்படி பிச்சை இல்லை என்று சொல்லலாம். இந்த வீட்டுக்கு அதிகாரியா அவள்? இதோ நான் சொல்கிறேன், உனக்குப் பிச்சை இல்லை, போய்வா" என்று சொன்னாள். அதுமாதிரி இருக்கிறது. அப்போது ராஜகோபாலாச்சாரி காலத்தில் எவ்வளவு கஷ்டம் இருந்தது? அதைச் சமாளிக்க முடியவில்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டோம். மருமகள் போல நமது நிதி மந்திரி அவர்கள் வரி போட்டால் மாமியார் மாதிரி பின்புறம், அங்கிருந்து கொண்டு நாங்கள் எதிர்க்கப் போகிறோம், கூட்டங்கள் போடப் போகிறோம் என்று சொன்னால், அதை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு மோசமாக பொதுமக்கள் இல்லை. உறுப்பினர்கள் கூட இல்லை என்று தைரியமாக நான் சொல்வேன். ஏனெனில் மதிப்பிற்குரிய லட்சுமணசாமி முதலியார் அவர்கள் இருக்கிறார்கள். கனம் கே. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் இருக்கிறார்கள். இவர்களிடத்தில் பொறுப்பைக் கொடுத்தால் கூட இப்போது போட்டிருக்கிற வரியில் சில திருத்தங்கள் செய்யலாம். ஆனால் வரி போடாமல் இருக்கமுடியாது.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: இப்போது 40 சதவிகிதம் தயாராக வந்திருக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்ரமணியம்: சந்தோஷம். இன்னும் 60 சதவிகிதம் ஏறியாகவேண்டும் வந்தாகவேண்டும். நாற்பதிலிருந்து ஒன்று எண்ணும்படி எண்ணிக்கைக்கு ஒன்றுக்குப் போய்விட்டாலும் போய்விடும். ஆகையால் அதை நாம் நம்பமுடியாது. மேலே போகுமோ கீழே போகுமோ, யாராலும் அதைச் சொல்ல முடியாது. நண்பர் ரொம்ப நல்லவர். ஒரே பிடிவாதம் ஒரே மாதிரி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பிற்காலத்தில் நாம் சொல்வதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் நிலைமை ஏற்படும்.

பெட்ரோலுக்கு வரி போட்டிருக்கிறது. பெட்ரோலுக்கு வரி போடலாமா என்று பேசுகிறார்கள். பெட்ரோல் எதற்கு உபயோகப்படுத்துவது? காருக்கு. எவ்வளவுபேர் மோட்டார் வைத்திருக்கிறோம்? கனம் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் கனம் பாலசுப்ரமணிய அய்யர் போன்றவர்கள் வைத்திருக்கலாம். இங்கு உள்ள உறுப்பினர்களுக்கு எத்தனை பேருக்கு கார் இருக்கும்? ஆகையால் குடிசையில் இருக்கிறவர்களுக்கு மோட்டார் கார் உண்டா? புரியாத்தனமாக, அறியாத்தனமாக, தெரியாத்தனமாகப் பேசுகிறார்கள். பத்திரிகைக்காரார்கள் கூட வரியைப்பற்றி ஆராயாது வரிந்து தள்ளுகிறார்கள். ஆளும் கட்சி எதற்குப் போடுகிறார்கள்? இவர்களுக்கு ஆசையா? இந்த மாதிரி சட்டசபையில் அங்கத்தினராக வரவேண்டுமென்று தியாகம் செய்தோம். ஜவஹர்லால் நேரு கூட இந்திய பிரதமராக

6th March 1963] [திரு. ஏ. சுப்ரமணியம்]

இப்படி வருவார் என்று நினைத்தாரா? கனம் காமராஜ் இங்கு முதலமைச்சராக வருவதற்காகவா தியாகம் செய்தார்? ஆகையால் நாட்டுக்கு உரியவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களை நாடி நல்லது செய்யுங்கள் என்று மக்கள் எங்கள் கையில் ஒப்படைத்திருக்கிறார்கள். எப்படி நாட்டை ஆளமுடியும்? எப்படி நாட்டைக்காப்பாற்ற முடியும்? நெருக்கடியை உத்தேசித்து ஏதோ சில நல்ல காரியத்தை செய்கிறோம். கொள்ளை அடிக்க முடியுமா? வேறு ஏதாவது செய்ய முடியுமா? பொறுப்பு இல்லாதவர்கள் ஆட்சியில் இருந்தால் ஏதாவது செய்வார்கள்! ஆகையால் உறுப்பினர்கள் தயவு செய்து இவற்றையெல்லாம் தாராளமாக மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். ஏதோ தேர்தல் வருகிறது, இதைக் கொண்டு ஏதாவது பேசலாம், செய்யலாம் என்று இருக்கக்கூடாது. எல்லோரும் இதில் ஈடுபட்டு இவற்றை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு சின்ன விஷயத்தைக் குறிப்பிட்டுவிட்டு அமர்ந்துவிடுகிறேன். டீ ஒரு பவுண்டுக்கு விலை ரூ. 4.35 ஆக இருக்கிறது. இந்த வரிக்குப் பிறகு ரூ. 4-55 க்கு ஒரு பவுண்டு கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அப்படி வருகிறபோது எத்தனை கப் டீக்கு இந்த 20 நயா பைசா உயர்கிறது? ஒரு பவுண்டுக்கு எத்தனை கப் போடலாம்? 150 கப் போடலாம்.

மிஸ்டர் சேர்மன்: டீக்கு யார் வரி போட்டது? இப்போது இங்கே அதை ஏன் பேசுகிறீர்கள்? The hon. Member will please resume his seat.

திரு. ஏ. சுப்ரமணியம்: 150 கப்புக்கு ஒரு பவுண்டு டீ போட முடியும். ஆகையினால் வரி போட்டது நியாயமாகத்தான் இருக்கிறது. அதிகமாகக் கூடுதலாக வியாபாரிகள் விற்கப்படாதவாறு அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு பரிபூர்ணமாக ஆதரவு தெரிவித்து வரவேற்கிறேன் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. டி. ஜோகி கவுடர்: தலைவர் அவர்களே, 1963-64 பட்ஜெட்டை வரவேற்றுச் சில வார்த்தைகள் பேசுகிறேன். 4-00 p.m.

நீலகிரியில் உருளைக்கிழங்கு சாகுபடி அதிக மோசம் அடைந்திருப்பதால், உருளைக் கிழங்கு விவசாயம் செய்பவர்களுக்கு கவர்ன்மெண்டிலிருந்து கடன் வாங்கியிருக்கும் தொகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசாங்க சின்கோனா டிபார்ட்மெண்ட்டை விவசாய இலாகாவுடன் சேர்த்தால் அரசாங்கத்திற்கு மேற்பார்வை சிலவு குறைந்து இருக்கும். ஆகையால் இது இரண்டையும் ஒன்றாகச் சேர்த்தால் நலமெனக் கருதுகிறேன்.

குந்தா எலெக்ட்ரிக் டிபார்ட்மெண்டாரால் பூமி இழந்தோர்களில் இன்னும் சிலருக்கு பூமி கொடுக்கப்படவில்லை. ஆகையால் இதை அரசாங்கம் உடனடியாக கவனித்து பூமி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரியில் பருவநிலை மாறிவிட்டதாலும், விலைபொருள்கள் ஒவ்வொன்றும் கெட்டு விட்டதாலும், நியாய விலைக் கடைகள் மீண்டும் அதிகமாக நடத்த அரசாங்கம் உத்திரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஊட்டியில் நடக்கும் கச்சா பிலிம் தொழிற்சாலைக்கு வேலைக்கு ஆட்கள் எடுக்கும்போது, முதல் சலுகை நீலகிரி மக்களுக்கு கொடுக்க அரசாங்கம் உத்தரவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நீலகிரியில் சட்டசபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று நீலகிரி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொண்டு பேச சந்தர்ப்பம் கொடுத்த தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

(Deputy Chairman in the Chair.)

திரு. கே. கமலக்கண்ணன் : மதிப்புக்குரிய உபதலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் முழு மனதோடு வரவேற்றுப் பாராட்டுகிறேன். அனுபவமும், ஆற்றலும், திறமையும் வாய்ந்த நமது மாநில அமைச்சரவை இப்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர நிலை காரணமாக பல புது பொறுப்புகளை ஏற்றுக்கொண்டும், அதே சமயத்தில் அங்கே நிகழக் கூடிய ஆக்கிரமிப்பைச் சமாளிக்கும் வகையில் பல திட்டங்கள் வகுத்து அதற்கும் பெரும் அளவுக்குப் பணம் ஒதுக்கியும், நம் நாட்டின் விவசாயம், தொழில் உற்பத்தி, மின்சாரம், இன்னும் பலதிட்டங்களும் எந்த வகையிலும் குறையாமல் நடத்த வசதி செய்து இருப்பதை நாம் காண்கிறோம். உறைந்து கிடக்கின்ற இமயத்தின் பக்கம் கோடைக்காலம் நெருங்கி வருகின்ற இந்தக் காலத்தில் சமயம் பார்த்து மேலும் ஆக்கிரமிக்கக்கூடிய அண்டை நாட்டு சீனர்களுடைய போக்கைக் கவனிக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். மன வேதனை ஒரு பக்கம் இருந்தாலும், நாம் எல்லோரும் வீர உணர்ச்சியோடு, போர் முனைக்கு தேசியச் சேவைக்குப் போக ஒற்றுமையோடு எந்த வித்தியாசமும் பாராமல் உழைக்க உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய நாட்டில் நாம் சுதந்திரத்துடன் இருக்க, நாட்டைப் பாதிக்கக் கூடிய அளவில் எந்த யுத்தமும் நடக்காத காரணத்தால் கஷ்ட நஷ்டங்கள் என்ன, ஆபத்துக்கள் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாத நிலையில் மக்களை நாம் காண்கிறோம். முதல் மகா யுத்தத்திலும் இரண்டாவது மகா யுத்தத்திலும் மேலை நாட்டிலும் மற்ற உலக மக்களும் எவ்வளவு பயங்கர அளவில் கொடூரமாகப் பாதிக்கப்பட்டார்கள் என்பதைப் பாதிக்கப்பட்டவர்களுடைய அனுபவங்களைச் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஜெர்மனியில் சென்ற மகாயுத்தத்தில் பெண்கள் 80 சத விகிதம் விதவைகளாகி இருக்கிறார்கள் என்ற ஒரு செய்தி கேட்டிருக்கிறேன். ஆனால் அதிர்ஷ்டவசமாக நம்முடைய நாட்டில் இப்பேர்ப்பட்ட யுத்தங்கள் இதுவரையில் பாதிக்காத அளவில் இருக்கிறது என்பதை நாம் மகிழ்ச்சியோடு காண்கிறோம். அது நம் நாட்டினுடைய ஒரு

6th March 1963] [திரு. கே. கமலக்கண்ணன்]

சிறப்பு. நாம் ஆன்மார்க்கமாக வழி வழியாக வந்த காரணத்தால், ஆண்டவன் நம்மைக் காப்பாற்றுகிறார் என்று தான் நினைக்கிறேன். இப்பேர்ப்பட்ட ஆபத்துக் காலங்களில் நாம் ஒவ்வொருவரும் அந்தப் பொறுப்புணர்ச்சியைக் கவனிக்க வேண்டும். மேலை நாட்டிலிருந்து வந்த ஆங்கிலேயர்கள், இரண்டாவது மகா யுத்தத்தின் போது, தங்களுக்குப் பல வசதிகள் இருந்தாலும் கூட மாதம் ரூ. 3,000, 4,000 சம்பளம் வாங்கின வெள்ளையர்கள், நம்முடைய சென்னையில் கூட, சைகிளில்தான் போய் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பல வசதிகளையும், அந்த இரண்டாவது யுத்தத்தின் போர் வீரர்களுக்காகத் தியாகம் செய்திருக்கிறார்கள். நான் நினைக்கிறேன், நம்முடைய மக்கள் கூட அப்பேர்ப்பட்ட தியாகங்களில் இறங்கவேண்டும். ஒவ்வொருவரும் நம்முடைய அன்றாட சாப்பாட்டில் ஒரு வேளையைப் போர் வீரர்களுக்காகத் தியாகம் செய்தாலும் கூட மிக நன்மை என்று நான் நினைக்கிறேன்.

அதிர்ஷ்டவசமாக இப்பேர்ப்பட்ட நெருக்கடியில் கூட நம்முடைய மாகாண அரசாங்கம் புதிய வரி ஒன்றும் விதிக்காமல் நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. உள்நாட்டு ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலை நாட்ட வேண்டும் என்று ஆயுதப்படையும், ரிசர்வ் போலீசும், ஊர்க்காவல் படையும், கல்லூரிகளில் இளைஞர்களுக்கு ராணுவப் பயிற்சி, தேசீய மாணவர் படை எழுப்புதல் போன்ற இந்தத்திட்டங்களுக்காக 1962-63-ஆவது ஆண்டில் 6 கோடி 98 லட்சம் செலவழித்து, இந்த ஆண்டில், 1963-64-ல் 8 கோடி 11 லட்சம் ஒதுக்கியிருப்பதை நாம் பார்த்துச் சந்தோஷப்படுகிறோம். இந்தத் திட்டங்களுக்கு இன்னும் அதிகமாக ஒதுக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள 291 கோடி ரூபாயில் விவசாயம், தொழில் வளர்ச்சி, நீர்ப்பாசனத்திட்டங்கள், கல்வி, மின்சாரம் போன்ற துறைகளுக்கென 195 கோடி ஒதுக்கியிருப்பதை மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இது போதாது; இன்னும் அதிகமாக ஒதுக்கினாலும் கூட, இப்பேர்ப்பட்ட சமயத்தில் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கு நன்மையாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நம்முடைய தேசீய வருமானத்தில் 50 சதவிகிதம் விவசாயத்தின் மூலம் கிடைப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. சென்ற நாலு ஆண்டுகளாக அமெரிக்க விவசாயிகள் ஆண்டுதோறும் நம் நாட்டில் விவசாயப் பணிகளைப் பார்க்க வருகிறார்கள். அங்கே ஒரு குடும்பத்தில் நாலுபேர் இருந்துகொண்டு, Machines உதவி கொண்டு 300, 400 ஏக்கர்கள் விவசாயம் செய்து உணவுப் பொருள்களை ஒரு பட்டணத்திற்கே ஆகவேண்டிய பெருமளவுக்கு உற்பத்தி செய்கின்றார்கள் என்று நான் தெரிந்து கொண்டேன்.

4-10 p.m.

அப்படி ஒரு சிறந்த முறையில் அவர்கள் விவசாயம் இருக்கிறது. நம் நாட்டில் ஒரு ஏக்கருக்கு 800 பவுண்டுக்கு மேல் விளைய வில்லை என்ற நிலைமை இருக்கிறது. அவர்களை விட எவ்வளவோ ஆண்டுகளாக நாம் கலாச்சாரத்திலும், விவசாயத் தொழிலிலும் பண்பட்டவர்கள் என்று நாம் உலகத்தில் கருதப்படுகின்றோம்.

[திரு. கே கமலக்கண்ணன்] [6th March 1963

இருந்தாலும் கூட இந்தக் காரியத்தைச் சற்று கவனிக்க வேண்டியிருக்கிறோம். இப்போது நாம் நடைமுறையில் கொண்டிருக்கும் புதிய திட்டத்தின் காரணமாக, விஞ்ஞான முறைகளின் காரணமாக, ஒரு ஏக்கரில் 1,500 பவுண்டு விளையக்கூடிய அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முனைந்திருக்கிறோம். அது கூடபோதாது அமெரிக்காவில் விளைவது போன்று ஒரு ஏக்கருக்கு 3,00 பவுண்டு விளையச்செய்ய அவர்கள் கையாளும் விஞ்ஞான முறை என்ன என்பதைக் கண்டறிந்து அந்த வழியை நாம் பின்பற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிராம மக்கள் தங்கள் சுய தேவையைக் கூடுமான வரையில் தாங்களே உற்பத்தி செய்து கொள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பெரும் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்துறையில் பெருமளவுக்கு வெற்றி கண்டிருக்கிறோம். இந்த ஆண்டு பட்ஜெட்டில் குடி தண்ணீர் வசதிக்கு 1 கோடியே 40 லட்சம் ரூபாயும், இணைப்புச் சாலைகள் அமைக்க 1 கோடியே 29 லட்சம் ரூபாயும், பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்கு 30 லட்சம் ரூபாயும் ஒதுக்கியிருப்பதைக் காண்கிறோம். ஆனால் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் இடிந்த நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட கட்டிடங்களைப் புதுப்பிக்கவும், இன்னும் புதிய பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டவும் 30 லட்சம் ரூபாய் போதாது என்று நினைக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் கூட இந்த விஷயம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கட்டிடச் செலவுக்கு ஓரளவு இந்தத் திட்டத்தை அரசாங்கம் உருவாக்கினால் அது மிக்க நன்மையாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

அடுத்து, மீன் வள அபிவிருத்தி பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கிராம மக்களுக்கு மீன் மிக அவசியமான உணவுப் பொருள் என்னும் நிலையில், கிராமங்களில் உள்ள பொதுக் குளங்கள், குட்டைகள், கிணறுகள், ஏரிகள் ஆகியவற்றில் மீன் வளர்க்க இலவசமாக வேண்டிய வசதிகளைச் செய்ய ஒரு திட்டத்தை அரசாங்கம் உருவாக்கினால் அது மிக்க நன்மை அளிக்குமென்று நினைக்கிறேன்.

கூட்டுறவுத் திட்டத்தின் அடிப்படையில் கிராம மக்களுக்கு இந்த நெருக்கடி நேரத்தில் நியாய வட்டிக்குக் கடன் கொடுக்கத் திட்டமிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். கிராம மக்களுடைய குறை என்னவென்றால், அவர்கள் அரசாங்கக் கூட்டுறவுத் துறையின் மூலமாக கடனுக்கு விண்ணப்பம் போடும் போது, கடன் தொகை அவர்கள் கோருகிற தேதியில் கிடைக்காமல் இருக்கிறது. இந்தக் குறையைப் பலர் என்னிடம் கூறியிருக்கிறார்கள். இதை அரசாங்கம் கொஞ்சம் கண்காணித்து, இந்தக் குறையை நீக்கினால் நன்மையாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். இப்பேர்ப்பட்ட அவசர காலங்களில், சீனர்கள் இந்தியா மீது ஆக்கிரமிப்பு செய்திருக்கிற காலத்தில், வியாபாரிகள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு Black-market

செய்யும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதே மாதிரி நிலையை முதல் மகாயுத்தத்தின்போதும், இரண்டாவது மகாயுத்தத்தின்போதும் நாம் கண்டிருக்கிறோம். இந்த அவல நிலை அதிகரிக்காமல் இருக்க நியாய விலைக்கடைகளைக் கிராமங்களில் ஏற்படுத்தி அவற்றைக் கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பில் விட்டு, நியாய விலைக்கு நல்ல பொருள்கள் கிராம மக்களுக்கு கிடைக்கச் செய்ய ஒரு திட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கட்டிட சம்பந்தமான செங்கல், சிமெண்டு, இரும்புச் சாமான்கள் கிடைக்காத அளவில் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் பல கட்டிடங்கள் கட்டப்பட்டு, முடிக்கப்படாமல் அந்த நிலையிலேயே விடப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப் பட்ட நிலை இல்லாமல், அப்படி விட்டிருப்பவர்களுக்கு மட்டுமாவது முடிந்த அளவில் 'First priority' கொடுத்து, வேண்டிய சாமான்கள் கிடைக்க வசதி செய்து கொடுத்தால், மிக நன்மையாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

சமீபத்தில் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு நான் தினச் செய்தியில் கண்டேன். கிருஷ்ணா கோதாவரி நதிகளின் தண்ணீரை சென்னைக்குக் கொண்டு வரும் திட்டத்தை, ஆந்திர முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டுவிட்டார்கள் என்று படித்தேன். இது நல்ல சந்தர்ப்பம். இந்த நெருக்கடி நேரத்தில் அதைப் பயன்படுத்தி, சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தில் அரசாங்கம் முன் வந்து வட ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற எந்தக் காலத்திலும் வரண்டிருக்கிற ஜில்லாக்களுக்கு இந்தத் தண்ணீர் பயன்படக் கூடிய அளவில், உடனடியாக கோதாவரி-கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டு வந்தால் மிக நன்மையாக இருக்குமென்ற என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது சென்னையில் போக்குவரத்து வண்டிகள் அதிகமாகி விட்டதால், பல விபத்துக்கள் ஏற்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். Heart of the City -ல் சென்னை நகரத்துக்கு மத்தியில் Mufassal பஸ் ஸ்டாண்டு வைத்திருப்பதால் மக்களுக்குத் தொல்லையாக இருக்கிறது, இந்த பஸ் ஸ்டாண்டைச் சென்னையின் எல்லையோரத்தில் அமைப்பதோடு, மூன்று பஸ் ஸ்டாண்டுகளாக, சென்னைக்குத் தெற்கே, மேற்கே, வடக்கே ஏற்படுத்தினால், நெருக்கடியை ஓரளவுக்குச் சமாளிக்க முடியும். மக்களுக்கும் ஓரளவுக்கு இந்தத் தொந்திரவு நீங்கும் என்று சொல்லி முடிக்கிறேன்.

(Mr. Chairman in the Chair.)

திரு. எம். எஸ். மஹாராஜ பிள்ளை : தலைவரவர்களே, தமிழ் நாட்டு பட்ஜெட்டை நாமெல்லோரும் வரவேற்று, ஆதரிக்கக் கூடிய நிலையில் இருந்த போதிலும் கூட, மத்திய சர்க்காரின் பட்ஜெட்டைப் பற்றி நாம் இங்கு பேசக்கூடாது என்று சொல்லக்கூடிய நிலைமை இருந்தாலும் கூட, Sound box குரல் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு தெரிவிக்கிற நிலையில் இருக்கிறேன்.

[திரு. எம். எஸ். மஹராஜ பிள்ளை] [6th March 1963

நாடு இன்று இருக்கக் கூடிய நிலைமையில் எல்லா அரசாங்கமும் நாட்டைக் காப்பாற்ற மக்களுக்கு வரி போட்டுத்தான் ஆக வேண்டுமென்பது உண்மைதான். ஆனாலும் ஒரு சில வரிகள், மத்திய சர்க்காரின் வரிகள் மக்களைப் பாதிக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். குறிப்பாக இந்த சேமிப்பு வரி, ஏழை எளியவர்களை, மத்தியதர வகுப்பை அதிக மாகப் பாதிக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள், ஒரு சில வீடுகள் வைத்திருப்பவர்கள், குறைந்த சம்பளம் உள்ளவர்கள், 10 சதவிகிதம் என்றும், தீர்வையில் 50 சத விகிதம் என்றும் சேமிப்பில் பணம் செலுத்த வேண்டுமென்றால், அது அவர்களைப் பெரிதும் பாதிக்கும். இந்த சேமிப்பு திட்டமானது அவர்களுடைய அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கு நாம் அதைப்பற்றி சர்ச்சை செய்து ஒரு முடிவுக்கு வர முடியாவிட்டாலும் மத்திய சர்க்காருக்கு நம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறிப்பாக, விவசாயிகள், நிலம் வைத்திருப்பவர்கள் இப்போது நெல் விலையின் இறக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கோட்டை ஒன்றுக்கு 15 ரூபாய் நெல் விலை இப்போது இறங்கியிருக்கிறது. 5 ரூபாய் இறங்கியிருந்தால், அது வாங்குகிறவர்களுக்கும், விற்பவர்களுக்கும் பாதிக்காத நிலை இருந்திருக்கும். 15 ரூபாய் இறங்கியிருப்பது பெரிதும் பாதிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. உற்பத்திச் செலவோ நாளுக்கு நாள் கூடிக் கொண்டிருக்கிறது. ஒரு ஏக்கர் நிலத்துக்கு 240, 250 ரூபாய் வரை செலவாகிறது. வருமானத்தைக் கணக்கிட்டால் சுமார் 500 ரூபாய்க்குள் தான் அந்த நிலத்திலிருந்து வருமானம் எதிர் பார்க்கமுடிகிறது, 16 அணா விளைச்சல் என்று வைத்தாலும் கூட. ஆகவே இதிலிருந்து அவர்கள் செலவு, மற்றதை எடுத்துக் கொண்டு, சேமிப்புக்கும் பணம் ஒதுக்க முயல்வது என்றால் அது பெரிதும் கஷ்டமென்று மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4-20 p.m.

விவசாய நிலங்களுக்கு இப்போது நாம் தீர்வைகளை, இந்த பட்ஜெட்டில் அல்லாத முறையில், கூட்டியிருந்தாலும் கூட, நகர சபை எல்லையில் உள்ள நிலங்களுக்கும், பஞ்சாயத்து எல்லையில் உள்ள நிலங்களுக்கும் 50 சதவிகிதம் மேலும் விதிக்கலாம் என்ற முறை இருந்து வருகிறது. செஸ் விதிப்பது நமக்குப் புதிது அல்ல. நகரசபை எல்லையில் உள்ள நிலங்களுக்கு 50 சத விகிதம் தீர்வையில் வரி விதிக்கலாம் என்பது முன்பே இருந்து வந்திருக்கிறது. அதை இப்போது பஞ்சாயத்து எல்லையில் உள்ள நிலங்களுக்கு விஸ்தரித்திருக்கிறார்கள். ஆனால் இந்த வரி விதிப்பு ஒரே விதமாக இல்லாமல், அந்தந்தப் பஞ்சாயத்துக்கள் அவர்களுடைய பற்றாக் குறைக்கு ஏற்றாற்போல் கூடுதல் வித்தியாசத்தில், இந்த செஸ்ஸை விதித்து வருகிறார்கள். சில இடங்களில் கூடுதலாகப் பாதிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் ஒரே அளவில் செஸ் விதிக்க வேண்டுமென்று நிர்ணயித்தால், ஒரு சங்கடமும் இல்லாமல் இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

6th March 1963] [திரு. எம். எஸ். மஹராஜ பிள்ளை]

அடுத்தபடியாக, நகராட்சியினுடைய ஒரு பிரதிநிதியாக இங்கு நான் வந்திருக்கிற முறையில், அதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். டோல் காம்பன்சேஷன் என்று நகராட்சி தோன்றிய காலத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை நகராட்சிக்குக் கொடுத்துவருகிறது. பின்னால் ஏதோ சிறிய அளவில் தொகையைக் கூட்டிக் கொடுத்து வருகிறார்கள். முதலாவது கிரேடு முனிசிபாலிடிகளுக்கு 25 ஆயிரம், 30 ஆயிரம் என்று டோல் காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. நீண்ட காலத்திற்கு முன்னால், அனுமதிக்கப்பட்ட தொகை அது. இப்போது அது காணாது. டோல் காம்பன்சேஷனிலிருந்து அரசாங்கத்திற்கு வருமானம் கூடுதலாக வருகிறது என்பதால், அரசாங்கம் நகராட்சிக்குப் பல ரோடுகளை ஏற்று நடத்தலாமென்று அதற்காக பாதி மானியமாகவும் பாதி கடனாகவும் கொடுத்து வருகிறார்கள். ஆனால் நடப்பு ஆண்டிலிருந்து அந்தத் தொகையைக் குறைக்கப் போவதாகவோ அல்லது நிறுத்தப் போவதாகவோ பேச்சு வருகிறது. அதைக் குறைக்கக் கூடாது. அதைக் கூட்டிக்கொடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நகராட்சி நிர்வாகத்தில் இப்போது அர்பன் ஏரியா டாக்ஸ் விதித்திருக்கிறோம். அதில் நல்ல வருமானம் வருவதை நாம் அறிவோம். அதற்குத் தமிழ்நாடு அரசாங்கம் எவ்வளவு கொடுக்கப்போகிறது என்பது குறிப்பாக இல்லை. குறிப்பாக நகராட்சி அங்கங்கே ஒரு நல்ல இண்டஸ்ட்ரீயை ஏற்படுத்துவதன் மூலம், காலனிகள் ஏற்படுத்துவதன் மூலம் நகராட்சியின் எல்லையிலுள்ள நிலத்தின் விலை உயர்ந்து வந்திருக்கிறது. இப்போது மகசூல் கிடைக்கக் கூடிய முறையில் வருமானம் வரக்கூடிய நோக்கில் நகராட்சிக்கு எந்தவிதமான பங்கும் அதில் இல்லாமற் போய்விடுமோ என்று அஞ்சவேண்டிய நிலையில் இருக்கிறது. நகராட்சியின் பகுதியை எந்த விதத்தில் கூடுதலாக்கலாம் என்று யோசனை இருந்துவருகிறது. இந்த அர்பன் ஏரியா டாக்ஸ் இன்று நகரவாரி எல்லை நிலங்களிலுள்ள காலி நிலங்களுக்கு விதிக்கக்கூடிய வரியிலிருந்து எண்டர்டைன்மெண்ட் டாக்சில் 10 சதவிகிதம் எப்படி எடுத்துக் கொண்டு கொடுக்கிறார்களோ அதுபோல நகராட்சிக்கு இதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சியில் நகர சீரமைப்பு இலாகாவுக்கு டைரக்டர் இருந்து வருகிறார்கள். அரசாங்கத்தினுடைய ஆட்சிக்கு உட்பட்ட அதிகாரி அவர், ஆனாலும் கூட இது ஒரு வியாபார ரீதியில் இயங்கி வருகிறது என்று தெரிகிறது. நகராட்சியில் 200, 300 எக்கர் விஸ்தரிப்புள்ள நகரத்திட்டங்களை அமைக்க முயற்சித்து நகராட்சிகளே பல திட்டங்கள் எடுத்து நடத்த அரசாங்கம் ஊக்குவித்து வருகிறார்கள். நகராட்சிகளும் அப்படிப்பட்ட திட்டங்களுக்கு பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் கடனாகக் கொடுத்து வருகிறது. ஆனால் இந்தக் கடன் டவுன் பிளானிங் டைரக்டர் ஸோனல் டாக்ஸ் என்று ஒதுக்கி ஒன்றுக்கு பத்து ரூபாய் விதம் கடன் கொடுத்து திருப்பி வாங்குகிறார்கள். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறபடியால், இதைப் பொதுவாக ஒரு திட்டம் தயாரித்து கொடுக்கிறார்கள். ஒரு நகராட்சியில் டவுன் பிளானிங் ஆபீசர் இருக்கிறார்.

அவர்களே இந்தத் திட்டத்தை தயாரித்து ஜாயிண்ட் டைரக்டர் அதை ஒப்புறுதி பெற்றுக்கொள்ளலாம். ஏக்கருக்கு 10 ரூபாய் என்றால், பல ஆயிரக்கணக்கான ரூபாய் நகராட்சிக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதை நல்லமுறையில் பகிர்ந்து நகராட்சி கூடுதலாக பாதிக்கப்படாமல் கொடுக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சியில் சில நகராட்சிகளுக்குக் கடனாகவும் மானியமாகவும் தண்ணீர்த் திட்டங்களுக்காகக் கடன் கொடுத்திருக்கிறார்கள். மானியமும் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட வருஷத்தில் அந்த வேலைகள் முடிவு பெறாமல் இருந்துவிடுகின்றன. முடிவு பெறாமல் இருப்பதற்கு நகரமன்றத் தலைவரோ அதில் உள்ள அதிகாரிகளோ பொறுப்பில்லை. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்தான் அதற்குப் பொறுப்பாக இருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்தில் வேலை முடியவில்லை என்பதால், கடனும் மானியமும் ரத்து செய்யப்படுமென்று சொல்லப்படுகிறது. குறிப்பாக எடுத்து நடந்து கொண்டிருக்கிற வேலைகள் முடிவுபெறாமல் இருக்கின்றன. பாளையம் கோட்டை நகராட்சியில் கூட முடிவுபெறாத வேலைகள் இருக்கின்றன. 26 லட்சம் கடனாகவும் மானியமாகவும் கொடுத்ததில் 20 லட்சம் செலவு ஆகி ஆறு லட்சம் மீதமிருக்கிறது. பாக்கியுள்ள வேலை முடியக்கூடிய நிலையில் இருக்கின்றது. ஆகையால், நகராட்சித் தவறுகளைப் பொருட்படுத்தாமல், தஅதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட தொகையை அதற்காகச் செலவு செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். நகராட்சித் திட்டங்களுக்கு டிரைனேஜ் அவசியமாக இருக்கிறது. டிரைனேஜ் ஏற்படுத்தா விட்டாலும் கூட, அவர்களுக்கு நல்ல வருமானம் ஏற்படக் காரணம் இருக்கிறது. கண்டோன்மெண்ட் ஏரியா என்று சொல்லக்கூடிய இடங்களில் டிரைனேஜ் இல்லாமல் பாதிக்கப்படுகிறார்கள். தொத்துநோய்கள் புரொடக்டெட் வாட்டர்-சப்ளை இருந்தும் கூட அதிகமாகப் பரவ ஏதுவாக இருக்கிறது. ஆகையால் நகராட்சிக்கு டிரைனேஜ் அவசியம் தேவை. அதற்கு பல ஏக்கர்களை சூயேஜ் ஃபார்மேஷும் செய்ய வாய்ப்பு இருக்கிறது. நகராட்சியின் வருவாயை அதற்காகக் கூட்டிக்கொள்வதற்கான வாய்ப்பும் இருக்கிறது. புதுக்கோட்டையில் 15 ஏக்கர் சூயேஜ் கட்டி 25 ஆயிரம் மிச்சமாக இருப்பதாக அவர்கள் வெளியிட்ட ஒரு சாவனிரில் காட்டியிருக்கிறார்கள். மதுரையில் அப்படியே மிச்சமாகியிருக்கிறது. குறுகிய காலத்தில் சூயேஜ் ஏற்படுத்தினால், அவர்களுடைய வருவாயிலிருந்தே அதைத் திருப்பிக்கொடுக்க வசதியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கத்தினுடைய பட்ஜெட் அறிக்கையில் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வித் திட்டத்திற்காகவும், வயது முதிர்ந்தோர் பென்ஷனுக்காகவும் கூடுதலான தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். அதை எல்லோரும் வரவேற்பார்கள். ஆனால் இந்த கல்வித் திட்டத்திற்காகச் செலவிடப்படுவதும் வயது முதிர்ந்தவர்கள் வாங்கக்கூடிய பென்ஷன் திட்டமும் சீர்கேடான முறையில் நடைபெறுகின்றன. இதை நல்ல முறையில் கவனித்து அதற்கு ஆவன செய்து அதை ஒழுங்கான முறையில் செலவு செய்ய வழிசெய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள

6th March 1963] [திரு. எம். எஸ். மஹராஜ பிள்ளை]

ஆசைப்படுகிறேன். பென்ஷன் ஸ்கீம் மூலம் ஆசிரியர்களுக்கு இப்போது புதிதாகக் கொடுத்து வருகிறார்கள். வரவேற்கக் கூடியதே. நகர மன்றத்தில் வேலை பார்க்கக்கூடிய ஆசிரியர்கள் இந்த பென்ஷன் ஸ்கீமில் வருகிறார்கள். ஆனால் அதே முறையில் நகராட்சியில் வேலைபார்க்கும் குமாஸ்தாக்களுக்கோ மற்றவர் களுக்கோ பென்ஷன் ஸ்கீமோ மற்ற வைத்திய வசதியோ இல்லை. ஒரே அதிகாரத்தின் கீழ் வேலை பார்க்கும் ஒரு சிலருக்கு மட்டும் அரசாங்கத்தினுடைய நன்மைகளைப் பெற வாய்ப்பும் மற்றவர் களுக்கு அது பயன்படாத நிலைமையும் இருந்துவருகிறது. ஆகவே அரசாங்கம் நல்ல முறையில் இதைப் பரிசிலித்து நகராட்சி யில் வேலை பார்க்கும் ஒவ்வொரு சிப்பந்தியும் அரசாங்கத்தின் நன்மைகளைப்பெறவும் பென்ஷன் ஸ்கீமில் இடம் பெறவும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, நமக்கு இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த வருஷம் நமது நிதியமைச்சர் அவர்கள் சென்ற 20, 25 ஆண்டுகளாக பல துறைகளில், அநேகமாக ஏதாவது ஒரு துறையில் அனுபவம் இல்லை என்று சொல்லக்கூடாது என்ற நிலைமையில், எல்லா நிர் வாகத் துறைகளிலும் மிகுந்த அனுபவம் வாய்ந்தவராக, நமக்கு முன்னாலே இந்த நிதி அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆகையினால் அவர் முழு அனுபவத்துடன் சமர்ப்பித்திருக்கும் ஒரு அறிக்கையின் மீது அபிப்பிராயம் சொல்லுவது என்பது கொஞ்சம் கஷ்டமாகவே இருக்கிறது. ஏனென்றால் நம்முடைய தொழிலமைச்சர் ஒரு பாராவில் சொல்லி இருக்கிறார். "சாதாரண மாக இந்த Administration Establishment charges என்று ஒரு Item -லே, பழக்கமாக அதைக் குறைக்க வேண்டும் என்று சொல்லு கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலிருந்து என்ன தோன்றுகிறது என்று சொன்னால், ஏதாவது சொன்னால் புதிதாக என்ன சொல்லுகிறீர்கள், எங்களுக்குத் தெரியாதா என்று தொனிக்கின்ற மாதிரி இருக்கிறது. ஆகையினால் ரொம்ப அனு பவம் இருக்கக்கூடிய ஒரு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த அறிக் கையின்மேல் அபிப்பிராயம் சொல்லுவது என்றால் கஷ்டமாகத் தான் இருக்கிறது. எங்களுக்கு அனுபவம் குறைவுதான். வெளியே பேசப்படுகின்ற விஷயங்கள் எங்களுக்குத்தான் முழு வதும் தெரியவருகின்ற படியால், அவற்றில் சிலவற்றை இங்கே சொல்லித்தானாகவேண்டும். சொல்லுகிறேன் என்றால் ஒரு நல்ல நோக்கத்துடன்தான் சொல்லுகிறேன் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 4-30 p.m.

முதலாவதாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இரண்டு கோடியே 74 லட்சம் துண்டு விழுகிறது. Sales Tax-ஐக் காமதேனு மாதிரி என்று சொல்லுவார்கள். நமது முன்னாள் நிதியமைச்சர் கோபால் ரெட்டி அவர்கள் இதைக் காமதேனு

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [6th March 1963

என்றுதான் குறிப்பிடுவார்கள். நான் ஒரு வியாபாரி என்ற முறையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். Sales Tax நாளாவட்டத்தில் நல்ல வளர்ச்சிதான் அடைந்து வந்திருக்கிறது. அதைச் சரியான முறையில் அமுல் செய்தால், இன்னும் அதிகம் வரும் என்பது என்னுடைய அபிப்பிராயம். பல துறைகளிலே அங்கே நடக்கின்ற விஷயத்தால், Sales Tax-ஐ மறந்தே வியாபாரம் செய்யவேண்டிய நிலைமையில் நாங்கள் இருக்கிறோம். வியாபாரம் என்ற முறையில் அதைச் செய்யாமல் முடியவில்லை. மறைத்துத்தான் ஆகவேண்டியதாக இருக்கிறது. எல்லோரும் திருடனாக இருந்து ஒருவன் மட்டும் யோக்கியனாக இருந்தால், அந்த ஊரில் இருக்கமுடியாது. அந்த வியாபாரம் பண்ணித்தான் ஆக வேண்டியதாக இருக்கிறது. தொழிலில் இருக்கிறவர்கள் நாங்கள். சர்க்காரை நடத்துகின்ற அதிகாரிகள் முன்பைவிட இப்பொழுது திறமையுடன்தான் நடத்துகிறார்கள். இன்னும் கொஞ்சம் திறமையாக நடத்தினால், எங்களுக்கும் கொஞ்சம் யோக்கியமாக இருக்க சந்தர்ப்பம் கிடைக்கும், உங்களுக்கும் வரி அதிகமாக வரும். அதனால் இந்த முறையில், நான் நினைக்கின்ற இந்த Item-லே மாத்திரம் கொஞ்சம் கண்காணிப்பாக இருந்தால் ரொம்ப ரூபாய் வரும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு மேலே நான் சொல்லுவது நல்லதாக இருக்காது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் மிகுந்த அன்போடு எனக்கு ரொம்ப அனுபவம் இருப்பதாகச் சொன்னார். என்ன இருந்தாலும் இந்த விஷயத்தில் அனுபவம் கிடையாது. என்னைவிட கொஞ்சம் அதிகம் அனுபவம் இந்த விஷயத்தில், கனம் அங்கத்தினருக்கு இருப்பதாகத் தெரிகிறது. ஆகையினால் இதோடு நிறுத்திக் கொள்ளாமல், குறிப்பாக அவருடைய யோசனைகளைச் சொல்லவேண்டும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: நான் என்னுடைய அனுபவத்தில் சில போயசனைகளைப் பொதுவாகச் சொன்னால் நல்லதாக இருக்காது. என்னுடைய யோக்கியதையை இப்பொழுதே நீங்கள் குறைவாக நினைத்துவிடுவீர்கள். அதனால் அமைச்சர் அவர்களிடம் தனியாகச் சொல்ல வேண்டுமென்று இருந்தால் சொல்லிக் கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக, நம்முடைய மாகாணத்திலே தொழில் அமைச்சருடைய மிகுந்த பிரயாசையாலே வழக்கத்திற்கு மாறாக பண உதவி செய்து, Industrial Finance Corporation மூலமாக, தனியார் துறையில் ஏராளமாகப் பண உதவிசெய்து, ஊக்கம் கொடுத்து இந்த மாகாணத்தில் பலதொழில்களை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதிலே ரொம்ப பணம் கொடுத்துவிட்டார்கள், இங்கே கொடுத்துவிட்டார்கள் அங்கே கொடுத்துவிட்டார்கள் என்று சொல்ல சந்தர்ப்பமும் இருக்கிறது. திட்டத்திற்கு மேலாகக்கூட கடன் கொடுத்து ஊக்கம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி கொடுக்கின்றபோது எந்த இடத்தில் கொடுத்திருக்கிறோமோ, அந்த ஸ்தாபனத்தில் போட்டிருக்கிற பணம்

6th March 1963] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

நன்றாக இருக்கிறது நம் காதில் விழவேண்டும். சாதாரணமாக Share இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு Share விலை 10 ரூபாய் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதிலே ஏராளமான மூலதனங்கள் போட்டிருக்கிறோம் என்றால், அது நல்லபடி நடக்கிறது என்றால் share விலை ஏற வேண்டும். அப்பொழுதுதான் பணம் போட்டதற்கு நல்ல பெயர் இருக்கும். எங்களிடம் ரூபாய் வாங்கி இருக்கிறார்கள். பொது ஜனங்களிடம் Share -விலை குறைவாக இருக்கிறது' என்று சொல்ல இடம் இருக்கக்கூடாது. 'எங்களைப்பற்றிப் பேச இடம் இருக்கக் கூடாது' என்று கண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன். என் காதில் விழுகிறது என்பதைத்தான் சொல்லு கிறேன். நானாக ஒன்றும் சொல்லிக்கொள்ளவில்லை. அந்தத் தொழிலில் தொடர்பு உள்ளவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதிலே 40 லட்சம் போச்சு, அதிலே போச்சு என்று மார்க்கெட் டிலே பேசிக்கொள்ளும் சந்தர்ப்பம் இருப்பதாலேதான் நான் சொல்லுகிறேன். நான் சொல்லுவதை நல்லெண்ணத்தில் கவனிக்கவேண்டுமே தவிர, குற்றம் சொல்லுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அங்கே மந்திரிகளைப் பற்றிக் குற்றம் யாராவது சொன்னால் நான் விடுவதில்லை. அதிலே கொஞ்சம் கண்காணிப்பாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

பொதுவாக கல்வி விஷயமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல பிரியப்படுகிறேன். இது ஆரம்பக் கல்வி விஷயம். சமீபத்திலே நானும் கனம் ராஜா அய்யர் அவர்களும் ஒரு பள்ளி விழாவுக்குப் போய் இருந்தோம். அந்த இடத்தில் 400 பிள்ளைகள் படிக்கிறார் கள். அதிலே 4, 5 பிள்ளைகள்தான் சம்பளம் கொடுக்கிறார்கள் என்று ஆண்டு அறிக்கையில் படித்தார்கள் அதற்கு நான்கு தினங்களுக்கு முன்பு நமது முதலமைச்சர் அவர்கள் நம் பக்கம் வந்திருக்கிறபோது இதைப்பற்றிச் சொன்னார்கள். இந்த School Fees Concession -ஐ என்னைப் போன்றவர்கள் கூட வாங்கி விடுகிறார்கள். சாதாரண உபாத்தியாயர்கள், மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள், வருமானத்தை ஒளிக்க முடியாமல் இருக்கிறவர் கள், அவர்களிடம்தான் சம்பளம் வாங்குவது. மாதச் சம்பளம் வாங்குகிறவர்களைத் தவிர மற்ற எல்லோரும் இந்த Concession-ஐ வாங்கிவிடுகிறார்கள். கணக்கு எடுத்துச் சொல்ல முடியும். எல்லோரும் கள்ளக் கணக்கே கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் இல்லை என்று பண்ணி விடலாம் என்று நினைக் கிறேன். முதல் அமைச்சர் அவர்களும் அப்படியே செய்து விடலாம் என்று நினைக்கிறேன் என்று சொன்னார்கள். 400 பிள்ளைகள் இருக்கிற இடத்தில், 5, 6 பேர்தான் கொடுக்கிறார்கள். இதிலிருந்து வருமானம் ஒன்றும் நாம் பெறப்போவதில்லை. இதைக் கல்வி அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக Training School சம்பந்தமாக Technical Education இருக்கிற இடத்தில் கமிட்டி போட்டு நடத்து

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [6th March 1963

கிறார்கள். Private School எல்லாம் ஒரு வியாபாரம் போல் இருக்கிறது. 200 ரூபாய் 300 ரூபாய் Admission -க்காகக் கேட்கிறார்கள். இது ஒரு Traffic மாதிரி இருக்கிறது. இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பெரிய மடாதிபதிகள்கூட செய்கின்றார்கள் என்று கேள்விப்படுகிறேன்.

கடைசியில், நமது சென்னையில் இருக்கிற Transport Service -ஐப் பற்றி மொத்தம் 660 பஸ்கள் இருக்கின்றன. எனக்கு பஸ் விஷயமாக சில தோழர்களோடு தொடர்பு உண்டு. சாதாரணமாக Income-tax Department-ல் எல்லா செலவும் போக இப்பொழுது இருக்கிற நிலையில் ரூ. 8,000 கணக்கு போட்டு இன்கம்டாக்ஸ் வசூல் செய்கின்றார்கள். கணக்கை நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி Flat rate - ஆகப் போட்டு விடுகிறார்கள். நமது நகர் Bus Transport -க்கு ஜாஸ்தி வருமானம் கிடைக்க வேண்டும் என்பது நிச்சயமாகத் தெரியவேண்டும். இதைவிட இரண்டு மடங்கு வருவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. இதிலே கொஞ்சம் கண்காணிப்பு வைத்து வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மொத்தத்தில் நிர்வாகத்தில் எல்லா மாகாணங்களையும் விட நாம் சிறந்த முறையில் நடத்துகிறோம் என்று பெயர் வாங்கி இருந்தாலும், இன்னும் சிறந்த முறையில், இன்னும் சிக்கனமாக நடத்த முடியும், நமக்கு ஊக்கம் இருக்கிறது, அறிவு இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு என் பிரசங்கத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

4-40 p.m. **திரு. டி. வி. தேவராஜ முதலியார்:** கனம் தலைவரவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை முழு மனதுடன் ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன் நமது அமைச்சரவர்கள் அன்பு அறிவு, ஆற்றல் மூன்றையும் செலுத்தி இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து சபையில் நன்கு சமர்ப்பித்திருக்கிறார். இது எல்லா வகையிலும் மக்களின் முன்னேற்றத்திற்கு வழி கோலக் கூடிய ஒரு அறிக்கையாகும். இப்போது இந்த அறிக்கை எப்படி இவ்வளவு புனிதமாக அமைந்தது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு மனிதனிடத்தில் படிப்பு இருக்கலாம்; ஆனால் பணம் இருக்காது. பணம் இருக்கலாம், படிப்பிருக்காது. பணமும், படிப்பும் ஒரு மனிதனிடம் சேர்ந்திருக்குமேயானால், அதைத்தான் சொல்லுவார்கள் லட்சுமியும், சரஸ்வதியும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள் என்று. 100-க்கு ஒருவர், இருவரிடத்தில்தான் அப்படி ஒன்று சேர்ந்திருக்கும்; 90 பேரிடம் சேர்ந்திருக்காது. அப்படி நாம் பார்க்கின்றபோது, எந்த மாகாணத்திலாவது, நிதியும், கல்வியும், நிதி இலாக்கா பொறுப்பும், கல்வி இலாக்கா பொறுப்பும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே அமைச்சரிடத்தில் இருக்கிறதா என்று பார்த்தால், ஒரு மாகாணத்திலும் இல்லை. (Hear, Hear) நம்முடைய மாகாணத்தில் லக்ஷ்மியும், சரஸ்வதியும் ஒன்று சேர்ந்து பொருத்தமாக நம்முடைய

6th March 1963] [திரு. டி. வி. தேவராஜ முதலியார்]

அமைச்சரிடத்தில் இருக்கிறது. அதன் காரணமாக இந்த நிதி நிலை அறிக்கை புனிதமாக அமைந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை, பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையாக தயாரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து வருத்தப்பட வேண்டி யிருக்கிறது. புது வரி ஒன்றும் போடாமல் பற்றுக்குறை பட்ஜெட் தயாரித்திருப்பதைப் பார்க்கும்போது, பழியை எல்லாம் மேலிடத்தில் சுமத்திவிட்டு, நாம் பழி இல்லாமல் போய்விடலாம் என்று எல்லா மாநில நிதியமைச்சர்களும் முடிவு செய்து விட்டார்கள் போலத் தோன்றுகிறது. எல்லா நிதியமைச்சர்களும் ஒரு நாள் டில்லிக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கே கூடி நம் பேரில் பழி வேண்டாம், மத்திய அரசாங்கத்தின் பேரிலே பழியைச் சுமத்திவிடலாம், என்று ஒரு மரத்தை வெட்டி, மற்றொரு மரத்தின் மீது சாத்திவிட்டு வந்து விட்டார்கள். அதனால் இந்த அறிக்கையில் வரி போடுவதற்கு வழியில்லாமல், விட்டு விட்டார்கள் நமது நிதியமைச்சர் என்று இந்த சபையில் சொல்ல முன் வந்தேன். அதைப்போல, இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் பற்றுக்குறை என்பது இல்லாமலிருந்தால்தான் அது அறிக்கை யாகும். நான்கூட கணக்குப் புத்தகம் வைத்துக்கொண்டு, செலவை அதிகமாகக் காண்பித்து, இருப்பு இல்லாமல் கணக்குக் கொடுத்தால் வருமான வரி அதிகாரி ஒத்துக் கொள்ள மாட்டார். இருப்பு இல்லாமல் செலவை அதிகமாகக் காண்பித்திருக்கிறாய்; இருப்பு எங்கே போயிற்று என்று கேட்பார். அதே மாதிரி நிதி நிலை அறிக்கையில் இருப்பு இல்லாமல் விட்டிருப்பது ஒரு குறையாக இருக்கிறது. அதைச் சரிப்படுத்திக் கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இரண்டாவதாக, இந்த ஊர்க்காவல் படையில் மாதர்களை அதிகமாக பங்கெடுத்துக் கொள்ளச் செய்ய வேண்டும். அதிகமான தாய்மார்கள் அந்தப் படையில் இருக்க வேண்டும். அப்போது தான் நாடு முன்னேற முடியும். சேர, சோழ பாண்டிய மன்னர்கள் காலத்தில் பார்த்தால், தாய்மார்கள் வற்புறுத்தி ஒவ்வொரு வீட்டுக்கு ஒரு ஆள் அனுப்பியதாக வரலாற்று ஏடுகளில் காண்கிறோம். அது போல் தாய்மார்கள் வற்புறுத்தி, ஊர்க்காவல் படை இப்படி இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து பிள்ளைகளை அனுப்பிவைக்க, அவர்களுக்கு அரசாங்கம் வசதி செய்து கொடுக்க வேண்டும். தாய்மார்கள் பெயரை வைத்துத்தான் எல்லா காரியமும் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்றால் அது மிகையாகாது. தாய்மார், பெண்பால் பெயர் இல்லாமல் இருக்கலாம் என்று போனால், இதற்கு பெயர் என்னவென்றால் பூமா தேவி என்கிறார்கள். சரி, பூமியில் வேண்டாம், மேலே போகலாம் என்றால் ஆகாஷ்வாணி என்கிறார்கள். பூமியிலும் இருக்க முடியவில்லை, ஆகாயத்திலும் இருக்க முடியவில்லை, தண்ணீரிடம் போகலாம் என்றால், கங்கா தேவி என்கிறார்கள். எல்லாம் பெண் பெயர். எந்த மனிதனுக்

காவது படிப்பு வேண்டுமென்றால், சரஸ்வதி அருள் என்கிறார்கள். பணத்தின் கிட்டே போகலாம், வாழ்க்கை நடத்தலாம் என்றால், லக்ஷ்மி கடாக்ஷம் என்கிறார்கள். இப்படி தாய்மார்களை முன்வைத்துத்தான் நடந்துவந்திருக்கிறோம். எங்கள் அருணாசல புராணத்திலும் 'சக்தியே, சிவமே' என்று தாய்மாரை முன் சொல்லி, பின்னால்தான் நடப்பைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றிலும் தாய்மார்கள்தான் முதல் பங்கு பெற்றிருக்கிறார்கள். உணவு உற்பத்தியிலும் கஷ்டப்படுவது தாய்மார்கள்தான். நாமெல்லாம் களைபிடுங்கி வைத்து விடுகின்றோம். தாய்மார்கள்தான் வெய்யலில் காய்ந்து நடுகிறார்கள். வெய்யலில் அவர்கள் முதுகு கிழிந்துவிடுமோ என்று எண்ணக்கூடிய நிலையில் இருக்கிறது. அவர்கள் மனது வைத்தால்தான் முன்னேற்றமடையமுடியும். 'தாய், தந்தை, குரு, தெய்வம்' என்று தான் நம்முடைய முன்னோர்களும் தாய்மாரை முன்வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாடு முன்னேற்றமடைய தாய்மார்கள் ஊர்க்காவல்படையில் இருக்க வேண்டும். தாய்மார்கள் இருந்தால், உண்மையைச் சொல்லி விடுவார்கள். இந்த ஆள் தப்புச் செய்கிறார் என்று பயமில்லாமல் சொல்லிவிடுவார்கள். ஆண்களாகிய நாம் நாலு பேருக்கு பயந்து உண்மையை மறைக்க வேண்டியிருக்கும். ஆனால் அவர்கள் நான்கு பேருக்கு பயந்து மறைக்க மாட்டார்கள். இந்த மாதிரி குற்றம் நடக்கிறது என்று நமக்கு எடுத்துக்காட்டுவார்கள். அப்போது நாம் குற்றத்தை நீக்கி, தவறு செய்கிறவனைத் திருத்தி காரியங்களைச் செவ்வனே செய்ய முடியும். ஆகவே அவர்கள் ஊர்க்காவல் படையில் பங்கெடுத்து நாடு முன்னேற்றமடைய வாய்ப்புத்தரவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில், அரிசனங்கள், தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றத்திற்கு 3 கோடி ரூபாய் தான் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அதுபோதாது, இன்னும் அதிகமாக இருந்தால்தான் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியும். ஒரு சிலருக்கு மட்டும் வீடுகள் கட்டிக்கொடுத்துவிட்டால், அது மற்ற அரிசன மக்களுக்குப் பொறாமையை உண்டுபண்ணும். 4, 5 வீடுகளை அவர்களில் சிலருக்கு கட்டிக் கொடுத்துவிட்டு, பொறாமையை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கும், சிலருக்கு முன்னால் கட்டிக் கொடுக்கிறார்கள், நமக்கும் பின்னால் கட்டிக் கொடுப்பார்கள் என்ற எண்ணம் ஏற்படுவதில்லை. ஆகவே தான் சொல்லுகிறேன், இந்த இனத்துக்கு ஒதுக்கியுள்ள தொகை குறைவாக இருக்கிறது; அதை இன்னும் அதிகப்படுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

அடுத்தாற்போல், நான் சொல்ல விரும்புவது, மத்திய அரசாங்கம் அதனுடைய ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58 ஆக உயர்த்தி இருக்கிறது. நம்முடைய அரசாங்கத்தில் I.A.S., I.P.S., Health Department, Engineering Department, Teachers இவற்றிலுள்ள Technical அலுவலர்கள் மட்டும் 58 வயது வரையில் வேலையிலிருக்கலாம் என்றிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த மாதிரி இல்லாமல் எல்லோருக்கும் ஓய்வு

6th March 1963] [திரு. டி. வி. தேவராஜ முதலியார்]

பெறும் வயது 58 என்று நிர்ணயித்து, மத்திய அரசாங்கத்தில் எப்படி இருக்கிறதோ அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்தால், இந்த நெருக்கடியான சமயத்தில் அவர்கள் ரிடையர் ஆவதால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய **Provident Fund** தொகையாகிய 15,000 ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் அளவுக்கு உள்ள பெருந் தொகையை இப்போது கொடுக்க வேண்டியிருக்காது. இரண்டாவது அரை பென்ஷன் சம்பளம் மிச்சமாகிறது. அரசாங்கத்துக்குத் தெரியாததை நான் சொல்ல வில்லை கீழே உள்ள ஊழியர்கள், மேலே இருப்பவர்கள் 55 வயதில் ஓய்வு பெற்றால், நாம் முன்னுக்கு வர முடியும் என்று நினைக்கலாம். அவர்களுக்கு மன ஆறுதல் சொல்ல வேண்டியிருக்கிறது. பின்னால் தங்களுக்கும் ஓய்வு வயது 58 ஆக இருக்கும் என்பதை அவர்கள் நினைத்துப் பார்த்தால் நன்றாக இருக்கும், என்பது என்னுடைய ஆசை. ஆகவே எல்லா ஊழியர்களுக்கும் ஓய்வு வயது 58 என்று ஆக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்ததாக, மத்திய அரசாங்கம் மண்ணெண்ணெ மீது புதிதாகப் போட்டிருக்கும் வரியால், நம்முடைய மாகாணத்தில் புட்டி ஒன்றுக்கு இரண்டணா சென்னையில் விலை ஏறியிருக்கிறது. சென்னை பூராவும் மண்ணெண்ணெ அடுப்புத்தான் உபயோகிக்கிறார்கள். 45 ரூபாய் கொடுத்து நான்கூட வாங்கிவிட்டேன். இன்றைக்கு பத்திரிக்கையைப் பார்த்தால், சென்னையில் மண்ணெண்ணெ விலை ஏறியிருக்கிறது; பம்பாயில் போனமாதம் விற்ற விலையிலேயே விற்கிறார்கள் என்று தகவல் போடப்பட்டிருக்கிறது. கிராமங்களில் மண்ணெண்ணெ விளக்குதான் எரிகிறது. இந்த விலை உயர்வானது கிராம மக்களை, ஏழைகளை மிகவும் பாதிக்கிறது. ஆதலால் அமைச்சரவர்கள் இதை மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நேற்று திரு. O. P. ராமசாமி ரெட்டியார் தெரிவித்ததுபோல:

> "இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
> கெடுப்பார் இலானும் கெடும்"

எடுத்துச் சொல்லுகிறவர்கள் இல்லை என்றால், கெடுக்கக்கூடியவர்கள் இல்லாவிட்டாலும் தானே கெட்டு விடுவான் என்பது திருவள்ளுவர் வாக்கியம். ஆகவே எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம். நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, இந்த மண்ணெண்ணெக்குப் போட்டிருக்கும் வரியைக் குறைக்கவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏழைமக்களுக்கு அது உதவிகரமாக இருக்கும் என்பதால், அதைச் செய்ய நமது அமைச்சர் உடனடியாக முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*126. *Notification issued with G.O. Ms. No. 745 Industries, Labour and Co-operation, dated 6th February* 1963, *regarding amendment to the Madras Money-lenders Rules,* 1959.

127. *Notification issued with G.O. P. No.* 4628, *Revenue, dated 17th December* 1962, *relating to the reduction in the rate of tax to two per cent on articles made of baked clay and stoneware, etc., for the period commencing on 1st April* 1959 *and ending with the 31st March* 1962.

128. *Notification issued with G.O. No.* 190, *Revenue, dated 11th January* 1963 *regarding amendment to the Madras General Sales Tax Rules,* 1959, *published with Revenue Department Notification S.R.O. No A* 1941 *of* 1959, *dated 28th March* 1959.

* Laid on the table of the House on 5th March 1963.

